# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI

O.S. No.108 of 2019

Deposition of DW.1

Name of the Witness: **திரு.செந்தில்குமார்**

Date : 07.03.2026

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்)**

1) நான் என் அம்மா சுந்தராம்பாளுக்காக சாட்சியம் அளிக்கிறேன். என் அம்மா அவரே முன் நின்று சொத்தை கிரயம் வாங்கினார். என் அம்மாவிற்குதான் அந்த சொத்து அவர் எப்படி முன் நின்று வாங்கினார் என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். என் அம்மாவிற்கு தற்போது 76 வயதாகிறது. நான் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். என் அம்மா சொத்தை கிரயம் வாங்கிய சமயத்தில் நான் தனிப்பட்ட முறையில் மருத்துவ தொழில் செய்து வந்தேன். என் தாயாருக்கு நானும் என் தங்கையும் உள்ளோம். என் தாயார் சொத்தை கிரயம் வாங்கும்போது வழக்கறிஞரிடம் சட்ட கருத்து கேட்டு வாங்கினார். அது போன்ற எழுத்து மூலமான சட்ட கருத்துரை வாங்கவில்லை.

என் அம்மா வாங்கிய சொத்து கோணங்கிநாயக்கனஹள்ளியில் சர்வே எண் .23/3பி ல் 1 ஏக்கர் 37 சென்ட். என் அம்மா வாங்கிய கிரய பத்திரத்தை நான் படித்து பார்த்தேன். அதன் கிரய பத்திரத்தை படித்துதான் நான் விவரங்களை தெரிந்து கொண்டேனா என்றால் சரியல்ல, என் அம்மா வாங்கும்போது நானும் உடன்

இருந்தேன். என் அம்மா சொத்தை கிரயம் வாங்கும்போது நானும் உடன் இருந்ததாக என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல என் தாயாரும் அவருடைய பதிலுரையில் சொத்தை வாங்கும்போது நான் உடன் இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

3) சொத்தை என் அம்மா வாங்கும்போது அதில் சொத்தின் 2வது கிரயம் கொடுப்பவர் ரோஹித் பாலாஜி என்பவர் மைனராக உள்ளதால் நீதிமன்றத்திலிருந்து உத்தரவு பெற்றேனா என்றால் இல்லை, அந்த மைனரின் அப்பாவே சொத்தை விற்றார். பி.வா.சா.ஆ.3 கிரய பத்திரத்தில் தங்கவேல் செட்டியாருக்கு பாக பிரிவினைக்கு முன்பு சொத்துக்கள் எப்படி பாத்தியம் என்றும் அதற்குண்டான ஆவணங்கள் பற்றியும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பாக பிரிவினை பத்திரத்தில் வாதி தரப்பினர் இல்லை என்றாலும் அதில் அவருக்கு பாகம் ஒதுக்கப்படவில்லை என்றாலும் சரிதான். அந்த பத்திரத்தில் அவர் அப்பா அவருக்கு பாகம் எதுவும் கொடுக்கவில்லை.

4) என் தாயார் பாக பிரிவினை பத்திரத்தை படித்து புரிந்து கொண்டபின்தான் கிரயம் வாங்கினார் என்றால் ஆமாம். நான் தருமபுரியில்தான் 40 ஆண்டுகாலமாக இருக்கிறேன். தங்கவேல் செட்டியாரின் குடும்பத்தாரை பற்றி எனக்கு தெரியுமா என்றால் என் அம்மாவிற்கு சொத்தை விற்ற தங்கவேல் செட்டியாரின் மகன் ஜவஹரை எனக்கு தெரியும். அவர் தம்பி டாக்டர் சுபாஷ் என்பவரையும் தெரியும். மற்றவர்களை பற்றி எனக்கு தெரியாது.

5) சொத்தை கிரயம் வாங்கும்போது தங்கவேல் செட்டியார் உயிருடன் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.11 தங்கவேல் செட்டியார் இறப்பு சான்றிதழ் தான் என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.11 தங்கவேல் செட்டியார் இறப்பு சான்றிதழில் 09.09.2010ம் தேதி இறந்துவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாக பிரிவினை பத்திரத்தில் ஜவஹருக்கு என்ன பாகம் ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியும். மற்றவற்றை நான் சரியாக கவனிக்கவில்லை. வாதிக்கு பாகம் ஒதுக்கப்பட்டதா ஒதுக்கப்படவில்லையா என்பது பற்றி எனக்கு தெரியாது. வாதி தங்கவேல் செட்டியாரின் மகள் என்றால் சரிதான். தங்கவேல் செட்டியாரின் மகளான வாதிக்கு பாக பிரிவினை பத்திரத்தில் ஒரு தரப்பினராக சேர்க்காததாலும் அவருக்கு எந்த சொத்தும் ஒதுக்கப்படாததாலும் அந்த பாக பிரிவினை பத்திரம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. அதன் பின்னிட்டு ஏற்பட்ட பிழை திருத்த பத்திரமும் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. பாக பிரிவினை பத்திரம், பிழை திருத்த பத்திரத்தின் அடிப்படையில் என் அம்மா வாங்கிய வா.சா.ஆ.12 கிரய பத்திரம் சட்டப்படி செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல.

6) என் தாயாருக்கு கிரயம் செய்து கொடுத்த ஜவஹர் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். என் தாயார் தாக்கல் செய்த எதிருரையில் வாதியின் தாத்தாவிற்கு குறைவான சொத்துக்கள் இருந்தது என்றும், வாதியின் அப்பாவிற்குதான் சொத்துக்கள் இருந்தது என்பதை

நிரூபிப்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், என்னுடைய சொத்திற்கு சம்மந்தமான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன்.

7) என் அம்மா கிரயம் பெற்ற சொத்து தங்கவேல் செட்டியாரின் தனிப்பட்ட சொத்து இல்லை என்றாலும் அவருடைய அப்பாவின் சொத்துதான் என்றாலும் அதனால்தான் சொத்துக்கள் எப்படி பாத்தியம் என்ற விவரங்கள் கிரய பத்திரத்தில் இல்லை என்றால் சரியல்ல. சொத்துக்கள் தங்கவேல் செட்டியாரின் அப்பாவின் சொத்துக்கள் என்பதால் அதில் வாதிக்கும் உரிமை உள்ளது என்றாலும் வாதியை தவிர்த்து தங்கவேல் செட்டியாருக்கு பாக பிரிவினை பத்திரம் ஏற்படுத்த உரிமை இல்லை என்றால் சரியல்ல.

8) வா.சா.ஆ.1 பாக பிரிவினை பத்திரத்தில் தங்கவேல் செட்டியாருக்கு விற்ற சொத்து பிதுராஜித சொத்துக்கள் என்றால் சில சொத்துக்கள் பிதுராஜித சொத்துக்கள் என்றும் சில சொத்துக்கள் அவருடைய சுயசம்பாத்திய சொத்துக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 பாக பிரிவினை பத்திரத்தில் எந்தெந்த சொத்துக்கள் பிதுராஜித சொத்துக்கள் என்றும் எந்தெந்த சொத்துக்கள் சுயசம்பாத்திய சொத்துக்கள் என்றும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என் அம்மா வாங்கிய சொத்து தங்கவேல் செட்டியாரின் பிதுராஜித சொத்து இல்லை என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன்.

9) என் அம்மா கிரயம் வாங்கிய சொத்து தங்கவேல் செட்டியாரின் கூட்டு குடும்ப வருமானத்தில் வாங்கியது என்றால் சரியல்ல. தங்கவேல் செட்டியார்

கூட்டு குடும்ப கர்த்தா என்ற முறையில்தான் அவர் பெயரில் ஆவணம் ஏற்பட்டது என்றாலும் சொத்துக்கள் அவரது சுயசம்பாத்திய சொத்துக்கள் இல்லை என்றாலும் சரியல்ல. பாக பிரிவினை பத்திரத்தில் தங்கவேல் செட்டியாரின் குடும்பம் கூட்டு குடும்பமாக இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவர்கள் குடும்பம் எப்படி இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. என் அம்மா சரிவர ஆவணங்களை பரிசீலிக்காமல் சொத்தை வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. என் அம்மா ஆவணங்களை பரிசீலனை செய்திருந்தால் சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்துக்கள் என்பது தெரிய வந்திருக்கும் என்றால் சரியல்ல.

10) பி.வா.சா.ஆ.5 என் அம்மா எனக்கு எழுதி கொடுத்த பொது அதிகார பத்திரத்தில் என் அம்மா நீதிமன்றத்தில் ஏன் ஆஜராக முடியவில்லை என்று எந்த வித காரணமும் சொல்லவில்லை என்றால் சரிதான், என் அம்மா நீதிமன்றத்திற்கு நேரடியாக ஆஜராக முடியாததால் எனக்கு இந்த பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்தார். என் அம்மா நீதிமன்றத்தில் நேரடியாக ஆஜராகி சாட்சியம் அளித்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால்தான் அவர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்காமல் என் பெயரில் பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல.

11) என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.2 வில்லங்க சான்றிதழில் வரிசை எண்.11 என் அம்மா கிரயம் வாங்கிய சொத்து பற்றிய குறிப்பு உள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.4 கணினி சிட்டா இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகுதான்

என்னால் பெறப்பட்டது என்றால் இந்த ஆவணம் வழக்கு போடுவதற்கு முன்பாகவே வழக்கு போடப்பட்டது. வழக்கு போடுவதற்கு முன்பாகவே கணினி சிட்டா வழங்கப்பட்டது என்பதற்கு ஆவணம் நான் தாக்கல் செய்யவில்லை. பட்டா எந்த தேதியில் வழங்கப்பட்டது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

12) என் தாயார் பேரில் உள்ள கிரய ஆவணத்தின் அசலை நான் தாக்கல் செய்யவில்லை. பாக பிரிவினை எழுதப்பட்ட விவரம் வாதிக்கு 2007ம் ஆண்டில் தெரியும் என்ற விவரம் எனக்கு கிரயம் கொடுத்த ஜவஹர் சொல்லி எனக்கு தெரியும். மேற்படி விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. ஜவஹர் சொல்லித்தான் இந்த விவரம் எனக்கு தெரியும் என்று என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஜவஹர் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வரவில்லை என்றால் சரிதான்.

13) பாக பிரிவினை பத்திரம் வாதியின் தந்தை மறைவிற்கு பின்தான் வாதிக்கு தெரிய வந்தது என்றால் சரியல்ல. என் அம்மா கிரயம் பெற்ற சொத்து வாதியின் கூட்டு குடும்ப சொத்து என்பதால் வாதிக்கு அதில் பாகம் உள்ளது என்றால் சரியல்ல. வாதி என்னென்ன சொத்துக்களை விட்டுவிட்டு இந்த வழக்கை போட்டுள்ளார் என்று என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதி கூட்டு குடும்ப சொத்துக்கள் அனைத்தையும் இந்த வழக்கில் சேர்த்துள்ளார் என்றும் எந்த சொத்தும் விடுபடவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

14) வாதிக்கு அவருடைய கூட்டு குடும்பத்திலிருந்து வாதியின் தந்தையார் வழி சொத்துக்களில் வாதிக்கு பாகம் உள்ளது என்றாலும் அதை மறுக்க எனக்கு உரிமை இல்லை என்றாலும் சரியல்ல. வாதி கோரியப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** – இல்லை

Sd/Tmt.U.Monica, M.L.,
Addititonal District Judge,
Dharmapuri.